# யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை

## Tamilischer Bildungsverein Deutschland

பொதுப் பரீட்சை - 2018 / 2019

தமிழ்மொழி

ஆண்டு: 10 | நேரம்: 3.00

சுட்டெண்: ......................

பகுதி 1

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.

பறம்புமலை, குரக்கன், ஒத்தி, பிராமி, அண்ணாமலை,

அ) அசோகர் என்ற பெரிய அரசரின் காலத்தில் .................................. எழுத்தே இருந்து வந்தது.
ஆ) பாரிமன்னன் ஆண்ட நாடு .......................................... என அழைக்கப்பட்டது.
இ) கூட்டாளித் தோழே ............................................... என்ன விலை விற்குதடா?
ஈ) விபுலானந்த அடிகளார் ....................................... பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமைபுரிந்தார்
உ) நீதிபதி வழக்கு விசாரணையை .................................... வைத்தார்.

2) பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

அ) எம்மோடு கூட இருப்பவர்கள் பிழையை நாம் கண்டுகொள்வதில்லை என்னும் பொருள் அமைந்தபழமொழி (கனவில் கண்டபணம் செலவிற்கு உதவுமா?, அடக்கமே பெண்ணுக்கு அழகு, இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது, அன்று எழுதியவன் அழித்து எழுதுவானா?)
ஆ) Software என்னும் தொடர்பாடல் சொல்லின் தமிழ்க் கலைச்சொல் (இறுவட்டு, மென்பொருள், வன்பொருள், இணையம்)
இ) பெண்கள் தேயிலைக் கொழுந்துகளை மடுவத்தில் கொடுத்தனர். இங்கு மடுவம் என்பது (கிழக்குப் பிரதேசவழக்கு, மலையகக் கிளைமொழி, தென்னிலங்கைமொழி, மேற்குப்பிரதேசவழக்கு)
ஈ) சேவல் கூவுவது போல யானை (பிளிறும், கனைக்கும், உறுமும், கர்ச்சிக்கும்)
உ) அடி தோறும் செய்யுள் சீர்களின் அல்லது வாக்கியத்தில் சொற்களில் இரண்டாவது எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது (அகராதி, ஆவணம், எதுகை, மோனை) எனப்படும்.
ஊ) உலகம் முழுவதும் இன்று தில்லுமுல்லு வேலைகளே நடைபெறுகின்றன. தில்லுமுல்லு என்பது (அடுக்குமொழி, இணைமொழி, இரட்டைக்கிளவி, அடுக்கிடுக்குமொழி)
எ) இன்று பழிபாவங்கள் செய்பவர்கள் எதற்கும் நாணம் கொள்வதில்லை. நாணம் என்பதன் ஒத்தசொல். (இயல்பு, குழைதல், வெட்கம், வெறுப்பு)

ஏ) அறிஞர்கள் கூட்டத்தை அவை என்பது போல படைவீரர்கள் கூட்டம் (சபை, தொகை, அணி, குவியல்) என்பது மரபாகும்.

ஐ) அக்கினி, அழல், தழல், கனல் என்ற சொற்கள் குறிக்கும் ஒரு ஒத்தசொல் (சூரியன், சந்திரன், நெருப்பு, நீர்)

ஒ) மனித நேயமற்ற செயல்களினால் நாள்தோறும் அமர் நடந்தவண்ணமே உள்ளது. இங்கு அமர் என்ற சொல்லின் ஒத்தசொல் (சந்தை, ஆபத்து, போர், துன்பம்)

3) பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.

அ) ஆதரவு ..........................................................
ஆ) ஈரம் ..........................................................
இ) கலக்கம் ..........................................................
ஈ) காய்தல் ..........................................................
உ) இணைந்து ..........................................................

4) பின்வருவனவற்றுள் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

அ) தன் மகளைப் பார்த்து இங்கேவாடா என்று தாய் அழைப்பது (எண்வழுவமைதி, இடவழுவமைதி, பால்வழுவமைதி, காலவழுவமைதி)

ஆ) அவள் மிகஅழகான புடவை ஒன்றை வாங்கினாள். இதில் மிகஅழகான என்பது (வினையெச்சத் தொடர், எழுவாய்த் தொடர், பெயரெச்சத் தொடர், இடைச் சொற்றொடர்)

இ) நடந்திலன் என்னும் சொல்லில் எதிர்மறை இடைநிலை (த், இன், இல், ந்)

ஈ) அப்பா வேலைக்குச் சென்றார். இவ்வாக்கியத்தில் எத்தனையாம் வேற்றுமை வந்திருக்கின்றது. (இரண்டாம் வேற்றுமை, முதலாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை)

உ) பலா மரத்தில் நிறைய பழங்கள் உண்டு. பலா என்பது (காரணப்பெயர், சிறப்புப்பெயர், இடுகுறிப்பெயர், இடுகுறிச் சிறப்புப் பெயர்)

ஊ) குழந்தைகள் மென்மையான இதயம் கொண்டவர்கள். மென்மையான இதயம் என்பதில் வந்துள்ள அடைமொழி (தனிப்பெயரடை, வினையடை, ஆக்கவினையடை, ஆக்கப்பெயரடை)

எ) பின்வரும் சொற்களில் பண்புத்தொகையாக அமைந்துள்ள சொல். (இராப்பகல், ஒடுமீன், மதிமுகம், கரும்பலகை)

ஏ) கார்குழல் இனிமையாகப் பாடல் இசைத்தாள் என்பதில் வந்துள்ள தொகை (வினைத்தொகை, அன்மொழித்தொகை, உவமைத்தொகை, பண்புத்தொகை)

ஐ) பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா பேசும் பொற் சித்திரமே. இப்பாடலில் வந்துள்ள அணி (தற்குறிப்பேற்றஅணி, உவமைஅணி, உயர்வுநவிற்சிஅணி, உருவகஅணி)

ஒ) சித்திரப் போட்டியில் கவிதா முதலாம் பரிசு பெற்றாள் என்னும் வாக்கியத்தில் பரிசு என்பது (பயனிலை, எழுவாய், செயப்படுபொருள், வினையெச்சம்)

5) பின்வருவனவற்றில் சேர்ந்திருப்பதைப் பிரித்தும், பிரிந்திருப்பதைச் சேர்த்தும் எழுதுக.

அ) அ + ஞானம் = ..............................................................................
ஆ) தேன் + அருவி = ..............................................................................
இ) தை + பொங்கல் = ..............................................................................
ஈ) அவனில்லை = ..............................................................................
உ) சிறகொடிந்தது = ..............................................................................

6) பின்வரும் சொற்களை இணைத்து வாக்கியம் எழுதுக.

அ) ஔவையார்: ………………………………………………………………………..
………………………………………………………………………………

ஆ) இணையம்: ………………………………………………………………………
………………………………………………………………………………

இ) பொங்கல்விழா: ……………………………………………………………….
………………………………………………………………………………

ஈ) தொழிற்கல்வி: ……………………………………………………………………..
………………………………………………………………………………

உ) அறிவியல்: ………………………………………………………………………
………………………………………………………………………………

# யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை
## Tamilischer Bildungsverein Deutschland

பொதுப் பரீட்சை - 2018 / 2019
தமிழ்மொழி

ஆண்டு: 10

பகுதி 2

முதலாம் வினாவுக்கும் ஏனைய மூன்று வினாக்களுக்குமாக நான்கு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

1) பின்வருவனவற்றுள் ஒன்றைப் பற்றி 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக.

அ) இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகள்
ஆ) சுவாமி விபுலானந்த அடிகள்
இ) இணையத்தின் (internet) பயன்பாட்டினால் ஏற்படும் நன்மை தீமைகள்
ஈ) முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம்
உ) தமிழ்மொழி

2) உணவுப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்று, மலிவு விற்பனையை அறிவித்துச் செய்யும் துண்டுப்பிரசுரம் ஒன்றைத் தயாரிக்க.

3) நீங்கள் பாடசாலையால் சுற்றுலா சென்றுள்ளீர்கள். அங்கிருந்து உங்கள் பெற்றோருக்கு ஒரு கடிதம் எழுதுக.

4) எழுத்தாளர் இலங்கையர்கோனின் ''மச்சாள்'' என்ற சிறுகதையின் மூலம் நீர் உணர்ந்து கொண்ட விடயங்களை விளக்குக.

5) நீர் விரும்பும் மொழி எது என்றும், விரும்புவதற்கான காரணங்களையும் எழுதுக.

6) உங்கள் பெற்றோர் புதிய வீடு ஒன்று வாங்கியுள்ளார்கள். அப்புதிய வீட்டிற்கு குடிபுகும் விழாவுக்கான அழைப்பிதழ் ஒன்று தயாரிக்க.